**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திருமதி. R. கீதா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை.**
**2024ம் வருடம் பிப்ரவரி மாதம் 8ம் நாள் வியாழக்கிழமை**
**IA 4/2024**
**in**
**OS 96/2022**
**உத்தரவு**

1) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரமும் அதனை தொடர்ந்து தாவா சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு பிரதிவாதிகள் அவர் வகை ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கின் பிரதிவாதியான இந்த நிர் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு இரு தரப்பு வாதங்கள் அடிப்படையில் எழுவினாக்கள் வனையப்பட்டு விசாரணை தொடங்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1, 2 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ. 1 முதல் 18 வரையிலான சான்றாவணங்கள் குறியிடப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

2) மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்து அமைந்துள்ள புல எண் 224/10க்கு புதிய சர்வே எண். 224/35 புலப்பட வரைபடம், 10(1) அடங்கல், "அ" பதிவேடு மற்றும் கிராம கணக்கு ஆகியவற்றின் வட்டாட்சியர் சான்றிட்ட நகலுடன் தாக்கல் செய்து அவை குறித்து சாட்சியம் அளிக்க வேண்டி தாவா சொத்து அமைந்துள்ள மானாமதுரை வட்டம், கே.கே.பள்ளம் குரூப் கிராம நிர்வாக அலுவலரை சாட்சியம் அளித்திட அனுமதி வேண்டியுள்ளார்.

3) உ.ந.சட்டம் கட்டளை 16 விதி 3ன் படி தரப்பினர்கள் சாட்சி பட்டியலில் அல்லாத நபர்களை தரப்பினர்கள் மனுவின் பேரில் சாட்சியமாக அழைக்க அனுமதிக்கலாம்.

4) மனுதாரர்/வாதி தரப்பில் மனுவில் குறிப்பிட்டுள்ள மானாமதுரை வட்டம், கே.கே.பள்ளம் குரூப் கிராம நிர்வாக அலுவலரை மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை முன்னிட சாட்சியமாக அழைக்கலாமா என காணும் போது, மனுதாரர் தரப்பில் தாவா சொத்தான சர்வே எண். 224/10 உட்பிரிவு 224/35 மனுதாரர்/வாதி அவரது முன்பாத்தியஸ்தர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை நிரூபிக்க சர்வே எண்.

224/10க்கு புதிய சர்வே எண். 224/35, 224/10பி உட்பிரிவு சர்வே எண் 224/10பி1 சம்பந்தமான புலப்பட வரைபடம், "அ" பதிவேடு, கிராம கணக்கு ஆகியவை தாக்கல் செய்ய வேண்டி கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக அழைக்க வேண்டியுள்ளார். எதிர்மனுதார் தரப்பில் அசல் வழக்கு எதிருரையில் தாவா சொத்தின் சர்வே எண். 224/35 எதிர்மனுதாரர் உட்பட அதனை சுற்றியுள்ள நபர்கள் பயன்படுத்தி வரும் பொதுப்பாதை என மறுத்து எதிர்வழக்காடப்பட்டுள்ளது. எனவே இவை குறித்து தீர்மானிக்க மனுதார்/வாதி மனுவில் குறிப்பிட்டுள்ள மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்ய மானாமதுரை வட்டம், கே.கே.பள்ளம் குரூப் கிராம நிர்வாக அலுவலரை அழைக்க அனுமதிக்கலாகும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**5)** முடிவாக மேற்கண்ட பரிசீலனை அடிப்படையில் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள ஆணவங்கள் வட்டாட்சியரின் சான்றிட்ட நகலுடன் தாக்கல் செய்ய மானாமதுரை வட்டம், கே.கே.பள்ளம் குரூப் கிராம நிர்வாக அலுவலரை அழைக்க மனுதாரர்/வாதிக்கு அனுமதி வழங்கி இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு பிப்ரவரி 8ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**